Y58,187M72
N33
17836

SCANNED

1418

# லெனின்

(ரஷ்யாவின் விடுதலை வீர

23
MADR



458,1y7m70
N33
178326

1933

[விலை அணா 2

'தமிழரசு' புத்தகாலயம்,
நெ. 31, வைத்தியநாத முதலி வீதி,
சென்னை.

# லெனி

(ரஷ்யாவின் விடுதலை வீரல

OFFICE OF THE REGISTRAR OF
23 JUN 1933
MADRAS

திரிசிரபுரம் - ஆ. நடராஜன் அவர்கள்
எழுதியது.

'தமிழரசு' புத்தகாலயம்,
நெ. 31, வைத்தியநாத முதலி வீதி,
சென்னை.

1933

காபிரைட்] [விலை அணா 2

# முன்னுரை

...று சோவியத் ரஷ்யா உலகத்திலுள்ள நாடு... ஓர் உதாரணமாகத் திகழ்கின்றதென்றால், அத...குக் காரணமாக இருந்தவர் லெனின் என்ற பெரியாரே யாவர். பெரியார் லெனின் சுயநலம் சிறிதும் கருதாது ஏழை ரஷ்யர்களைக் கொடுங்கோல் ஆட்சியினின்றும் விடுவிக்கவும், பணத்திமிர் படைத்தவர்கள் செய்து வந்த அட்டூழியங்களை ஒழிக்கவும் முயன்று அதனால் தாம் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து இறுதியில் தாம் நினைத்ததைச் செய்து முடித்த வரலாறு படிப்போர்க்கு உணர்ச்சியையும் ஊக்கத்தையும் உதவு மென்பதில் ஐயமில்லை. ஏழை மக்களின் துயரம் துடைப்பதற்கெனவே தோன்றி, அதன் பொருட்டே தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்த வெற்றி வீரர் லெனினது வாழ்க்கைச் சரித்திரத்தை அடிமைக் குழியில் வீழ்ந்து வருந்தும் இந்தியர் ஒவ்வொருவரும் கற்றறிய வேண்டியது மிகவும் அவசியமாகும். இதனை எண்ணியே திரிசிரபுரம்-ஆ. நடராஜன் அவர்கள் 'தமிழரசு' வாரப் பத்திரிகையில் லெனினது வாழ்க்கை, தோற்றம், செயல், குணம் முதலிய விவரங்கள் அனைத்தையும் சுருக்கமாக எழுதினார்கள். அதனை இப்புத்தக வடிவாக வெளியிட்டு உதவிய டாக்டர். மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பாடுடையதாகும்.

சென்னை, 24-5-33.

பா. பக்கிரிசுவாமி செட்டியார்,
தமிழாசிரியர்.

128326
923.102

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUN 1933
MADRAS

# லெனின்

## முன்னுரை

லெனின் என்பவர் ருஷ்யப் பொதுவுடைமை மதத் தலைவராவர். பொதுவுடைமை மதம் யாது, அது எத்தன்மையது என்பன இந்தியர்கட்கு மறை பொருள்களாய் உள்ளன. முதலாளித் தத்துவக்காரர்கள் பொதுவுடைமை மதத்தைப் பற்றிப் பிற மக்கள் அறியாத வண்ணம் எல்லாப் பத்திரிகைகளையும் கட்டுப்பாடு செய்திருக்கின்றனர். ஆதிக்கக் கொள்கையினை உடைய முதலாளித் தத்துவ வல்லரசுகளும் ருஷ்ய மதத்தின் தோல்விக்காக எதிர்ப் பிரசாரம் நிகழ்த்திக் கொண்டு வருகின்றன. அரசே தனக்கென ஒன்றின்றித் தவியா நிற்கும் நம் இந்தியர்கள் பொதுவுடைமை மதத்தை (அம்மதம்) பிறரால் வண்ணம் தீட்டிய பாங்கினும், பொய்க்கோள் ஏற்றிய பாங்கினும் கண்டு ஒன்றும் தெளியாராய் உள்ளனர்.

ருஷ்ய மதத்தைப் பற்றி நமக்குக் கிட்டும் நூற்கள் பலவும் முதலாளித் தத்துவக்காரர்கள் இயற்றியவைக

V58,1;87W70

ளாம். எனவே சமத்துவப் போரில் ஈடுபட்டு நிற்கும் நம் இந்திய மக்கட்கு ருஷ்ய மதத்தைப் பற்றி அறிய வேண்டும் என்ற வேட்கை நாளுக்கு நாள் மேலோங்கு கின்றது. ஆகலின் அதனை நிறுவிய உயர் திரு. லெனின் என்பாரின் வாழ்க்கை, தோற்றம், குணம் முதலிய வற்றைச் சுருங்கக் கூறுதலான் நலன் உண்டு என்று கருதி இதனை வரைகின்றோம்.

## இளமை

இளம் பருவந் தொட்டே மன்னரால் ஆற்றப் படும் ஆட்சி முறையை லெனின் வெறுத்து வந்தார். இவர்தம் சகோதரனை அரசாங்கத்தார் தூக்கிலிட்டுக் கொன்று விட்டனர். இதனால் முன்னரே உள்ள வெறுப்பும் பன்மடங்கு முதிர்ந்தது. ஏனைய மக்களைப் போலாது புரட்சி முறையைப் பயிலத் தலைப்பட்டார். சிலர் ஒரு பொருள் மீது வெறுப் புடையாராவ ராயின், உடனே அப்பொருளை முன் பின் நோக்காது தாக்கு வர். இஃது சினத்தால் நிகழ்வது. வெறுக்கப்படும் பொருள் உண்மையில் வெறுத்தற் குரியது எனக் காணின், வெறுத்தற்கு முற்பட்ட அப்பொருளைப் பற்றி எல்லாத் துறைகளிலும் ஆராய்ந்து பார்த்து, தன் வெறுப்பினையும் ஆராய்ச்சிக் குட்படுத்திப் பின் னரே அப்பொருளைக் கடிதன் முறை. எனவே, உண்மை யான புரட்சிக்குப் பயிற்சி நலன் மும்முறையும் வேண் டற்பாலது. பயிற்சியிலான் கூற்றும் கண்ணிழந்தான் நோக்கும் ஒரு தன்மையினவே.

லெனின் அரசர்களால் ஆளப்படுதல் அடாது எனக் கருதியவுடன், ஜர்மானிய அரசியற் பேராசிரியராம் மார்க்ஸ் என்பவர்தம் நூல்களைப் பயிலத் தலைப்பட்டார். இளமையில் கொண்ட இப்பயிற்சி லெனினைப் பள்ளிக்கூட வாழ்க்கையினும் நெகிழாது இருந்தது. இதன் பயனாய் மாணவர்கள் புரட்சி இயக்கத்திலும் ஈடுபட்டு காசான் சட்டக் கல்லூரித் தேர்ச்சிக்கு அனுப்பப் பெறாமல் விலக்கப் பெற்றார்.

லெனின் படிப்பில் ஒப்பற்ற அறிவுடையவர். இவரது தாய் இவரை ஓர் அரிய மகன் என்றே கூறுவர். கல்லூரிப் படிப்பு மண்ணாயதும், லெனின் அரசியல் புரட்சிக் கூட்டங்களிற் கலந்து கொண்டார்.

இவர் பரந்த நோக்குடையவர்; ஆழ்ந்த கருத்துடையவர்; ருஷ்யாவைக் கொடுங்கோன் மன்னனின் ஆட்சியினின்றும் மீட்பதுதான் தம் நோக்கம் எனக் கருதலாகாது என்றும், தொழிலாளர்களை அடிமை நிலையினின்று உயர்த்துதலே தம் கண்ணான நோக்கம் என்றும் கூறி வந்தார். அன்று தொட்டு தொழிலாளர்கள் தம் காப்பாளராய் இலங்கினார்.

## நாடு கடத்தலும் லண்டன் வாழ்க்கையும்

சில ஆண்டுகட்குப் பின்னர் இவரை ருஷ்ய அரசாங்கத்தார் சிறைப்படுத்திச் சைபீரியா என்னும் கடும் பனி வெளிக்கு நாடு கடத்தினர். சைபீரியாவினின்றும் லெனின் கடிதில் வெளியேறி 1900 - இல்

லண்டன் என்னும் ஆங்கிலத் தலைமைப் பட்டினத்தைச் சேர்ந்தார்.

லண்டனில் உள்ள ப்ளூம்ஸ்பரி என்னும் பகுதியில் வசித்து வந்த பொழுது குடிக்கூலிக்கு இருந்த இல்லத்தின் திரை சுக வாழ்க்கைக்கு ஏற்புடையதன்று எனக் கருதி அத்திரையை அவிழ்த்து எறிந்து அதனால் வீட்டுக்காரியின் வெஞ்சினத்திற்கு ஆளாயினர். எனினும் இளமை தொட்டுத் தம் அகத்தே வளர்த்து வந்த சுயேச்சைக்கும், அச் சுயேச்சையினைச் செயன் முறையிற் கையாடலே முதற் கடன் என்னும் கொள்கைக்கும் இத்திரை நிகழ்ச்சி அறிகுறியாய் நிற்கின்றமை காண்க.

ஆடம்பரமுள்ள ஆடைகளை இவர் அணியார். எனினும் மாசற்ற உடைகளையே இவரது உடலிற் காணல் கூடும்.

லண்டனில் இவர் தம் காலத்தைப் பேச்சிலும் பிற வீண் வேலைகளிலும் ஈடு படுத்தாதவராய், ஆங்குள்ள பிரிட்டிஷ் முசியம் நூற்சாலைக்குச் சென்று ஓயாது படித்து வந்தார். தொழிலாளர்கள் தம் விடுதலைக்குப் புறம்பான கருத்துக்களை உடைய ஒரு நூலினையும் இவர் படிப்பதில்லை. இவர் போன்று இதுகாறும் சரித்திரத்தில் தொழிற்சாலையின் உபயோகத்திற்காக உருக்கி வார்க்கப் பெற்றவர்கள் ஒருவரும் இலர் என்றே கூறல் கூடும். இன்றேல், புரட்சியின் போராற்றல் வாய்ந்த மதிவல்லார் எனினும் சாலும்.

## குண நலன்கள்

பலர் இவர்தம் குணங்களைப் பற்றி வரைந்திருக்கின்றனர். இவர் எளிய தகைமையினர்; உறுதி என்னும் உரன் வாய்ந்தவர்; நேர்மையொடும் நோக்குபவர் என்றும் இத்தகைய விழுப்பம் செறிந்த இக்குணங்கட்கு இவர்தம் நோக்கின் இருந்த தன்னம்பிக்கையே காரணமாம் என்றும் மொழிவர். இத்தகைய குணங்கள் மகான்கட்கே உரியனவாம் என்பது மறுத்தற்கியன்றதன்று. நேர்மையான நோக்குடையவர் எனினும் தந்திரத்தில் இவர் குன்றியவ ரல்லர். தாம் கொண்ட கொள்கைகளைச் செய்து முடிக்கும் கருத்துடையவ ராதலான், இவர்பாற் கண்ட குணங்கள் முற்றும் நிறைபட நின்றன வென்பது உண்மை.

ஆராய்ந்து தெளிந்த ஓர் உண்மையைக் கைக்கொண்ட மக்கள்பால், பேச்சின் திறன்கொண்டு சிலர் வாதாடுவர். அத் தன்மையினரைக் காணின் லெனின் உடனே அகன்று போய் விடுவர். சிலர் இஃது செருக்கால் நிகழ்கின்றது என்றும் கூறுவர். ஆனால் உண்மைக்காகப் பாடுபட்டவர்கட்கன்றோ காலத்தின் அருமை தெரியும்? நல்லதாய எதனையும் தீமைதான் என்று வாதிக்கும் பொல்லாப் பழக்க முடையவர்கள் இவ்வுலகிற் பலர். இவர்களைச் சீர்ப்படுத்துதலினும் அப்புறப் படுதலே அறிவுடைமை யாதலான், லெனின் இத்தன்மையினரைக் காணின் அகன்று போய் விடுவர் என்பது இவர்தம் அறிவின் பெருக்கிற்குச் சான்று

கின்றதே தவிர, இழிய செருக்கிற்குச் சான்ருகாமை காண்க. தாம் வேண்டுவது யாது என்பதை லெனின் குறிப்பிட் டுணர்ந்தவர். இதனை அடைதற்குண்டான முயற்சி யாதாயினும் அதனைக் கைக்கோடலில் லெனின் பின்னடையார். தாம் வேண்டுவது யாதென் றுணர்ந்த லெனின் பொதுமக்கள் வேண்டுவது யாதென்பதையும் நன் குணர்ந்தவர். இவ்விரு தரத் தாரும் வேண்டுவது ஒன்றே யாதலின், லெனின் கூறுவதனைத்தும் பொது மக்கள் கூற்ருகவே இருக்கும். எனவே லெனின் ஆற்றும் சொற் பெருக்குகள் எல்லாம் பொது மக்கட்கு முற்றினும் இயைபுகொண்டு இருந்தன. தொழிலாளர் தத்துவத் தலைவர்களில் லெனின் ஒப்புவமை யற்றுத் தலை சிறந்தார் எனின் ஒக்கும்; கல்விப் பயிற்சியினும் இணையற்றவராய் இருந் தார். தம் கொள்கைகளைப் பற்றிய பயிற்சியில் இவருக்கு இருந்த வேட்கை தணித்தற் கியலாதது என்பர்.

லெனின் பல பாஷைகளிலும் வல்லுநர். புரட்சிப் போர் கடுமையாக நிகழ்ந்த காலத்தில் இவர் செக்கோ ஸ்லொவேக்ய மொழியின் இலக்கணம் படித்துக் கொண்டிருந்தார். லெனின் மனநெகழ்ச்சி யற்றவர் என்றும் கூறப்படுகின்றது; வன்மனத்தினர் என்றும் உள்ளுருகும் சிந்தை யிலாதார் என்றும் மொழிவர். எனினும் சிற்சில நிகழ்ச்சிகள் இதனைப் பொய்ப் படுத்து கின்றனவாம்.

லெனின் குழந்தைகள் மீதும், பிராணிகள் மீதும் பேரன்பு கொண்டவர். 'இறுதியில் சிரிப்பவன் நன்ருய்ச் சிரிப்பவன்' என்னும் பழமொழியை வழங்கி அதற் கேற்ப நடந்து கொள்வார்.

சமூக அமைப்பில் தொழிலாளர்களே புரட்சிக்குள் ளாகும் நிலையில் இருக்கின்றனர் என்று இவர் இளமை தொட்டே கூறி வந்தார். 1917-இல் ருஷ்யாவில் இவர் இப் புரட்சி இயக்கம் ருஷ்யாவை மட்டும் அசைக்காது என்றும், உலகம் எங்கும் உள்ள முதலாளித் தத்து வங்களை யெல்லாம் அழித்து நிற்கும் என்றும் கூறினர்.

ஒருவரைப் பார்க்குங்கால், லெனின் தம் வலக் கையால் கண்களை மூடிக்கொண்டு விரற் சந்துகள் வழி யாகப் பார்ப்பார். இஃது இவர்தம் வழக்கம். உவல்ஸ் என்னும் ஆங்கிலப் பேராசிரியரை இங்ஙனமே பார்த்து விட்டு 'எத்துணை விதண்டாவாதி! எத்துணை முதலாளித் தத்துவம் படைத்த சிறிய பேய்!' என்று மொழிந்தார். உலகம் எல்லாம் தழைத்தல் வேண்டும் என்னும் அகன்ற கருத்துடையர் எனினும் லெனின் தேசப் பற்றும் உடையவர். ருஷ்யப் புரட்சீ இயக்கம் எவ்வள வில் எவ்வாற்றல் கொண்டு நிகழும் என்பதை 1915-இல் லெனின் அறுதியிட் டுரைத்தனர்.

## மதத்தின் தத்துவம்

மதம் என்பது மக்களுக்கு ஒரு மயக்கப் பொரு ளாய் இருக்கின்றது (அபின்) என்று பொதுவுடைமைக்

கட்சியினர் கூறுகின்றனர். தன் உண்மை நிலையை, அஃதாவது தன் ஐயறிவிற்குத் தோன்றும் பிரபஞ்சத்திற்கும் தனக்கும் உள்ள தொடர்பு யாது, அது எத்தன்மைத்து, தன் இருப்பிடம் எங்குளது, அதுதான் நிற்கும் நிலையா அலது வேறு நிலையா என்று அறிவின் போக்கில் ஆராய்ச்சி செய்து, இவ்வாராய்ச்சிக் குரிய சில பழக்கங்களைச் சாதனமாய்க் கொண்டு வாழ்ந்து, இறுதியில் உண்மை காண்டலே மதத்தின் வெளிப்படையான கருத்து. இந்து மதம் போன்ற மதங்களில் கடவுளைப் பற்றிக் கூறி யிருப்பினும், 'கடவுள் இருப்பைக் கண்டு பிடி' என்று கூறப்படுகின்றதே யன்றி கடவுள் உண்டு என வலி யுறுத்திக் கூறுவதாகக் காணப்படவில்லை. புத்தர் ஒழுக்கங்களை எடுத்துரைத்துப் போனார். கடவுள் உண்டா என வினவியமைக்கு மௌனம் கொண்டு, உண்டு என்பதையும் இல்லை என்பதையும் தெரிந்து கொள்ளுதல் அவரவர் தம் முயற்சியைப் பொறுத்தது எனக் காண்பித்து விட்டார். யோகிகளும் முயற்சியால் கண்டு பிடி என்கின்றார்கள். ஆதலால் மதங்கட் கெல்லாம் அடிப்படையாக உள்ள தனிப் பொருளே ஒரு வகை முயற்சியால் அநுபவவாயிலாய்க் காண்டற் குரியதென்றுதான் உண்மை மதத்தர்களால் கருதப்படுகின்றது. ஆதலின் மதம் என்பதை 'மனிதன் தன் உண்மை நிலையை அறிதற்குரிய ஒரு முயற்சியில் துணை கோடுக்கும் ஓர் கலை' என்றுணராதவர்களாய்ச் சமூகக் கட்டுப்பாடுகட்கும், பிளவிற்கும், போராட்டங்கட்கும் உபயோகித்துக்கொள்ளலாயினர்.

உண்மை யறிய விரும்பும் மக்கள் அச் சிரத்தை ஒன்றுனே அவ்வுண்மை தம்முள் விளையப் பெற்றுணர்வர். ஈதன்றி கூட்டம் சேர்க்கும் முறையிலும், நீ கிறிஸ்துவன், நான் இஸ்லாமியன், நீ ஹிந்து, நான் யூதன் என்னும் பான்மையிலும் ஒருவர் தொண்டை மீது ஒருவர் பாய்ந்து உதறுவதற்கு மதம் உளது என மக்கள் கருதுவார்களாயின், மதத்தினும் கொடிய மயக்கச் சரக்கு அயனுட்டுப் பிராந்தியும் ஆகாமை காண்க. உலகமெலாம் தனி நிறைந்த ஓர் உண்மையை, யோகியர்தம் அநுபவத்தின் உவப்பை, சாந்த நிலையை, மெய்யறிவில் இலகும் ஒன்றை மக்கள் அந்தோ! மதம், சாதி, சமயம் என்னும் குப்பைகளில் ஆழ்த்தி விட்டனர். ஆறனுள் ஒரு தீமையாம் குரோதத்திற்கு இக்காலத்தில் மதத்தினும் பெரிய துணை வேறென்றுண்டோ எனக் கருதற் பாலதாய் இருக்கின்றது.

எனவே, மதம் மக்கட் சமூகத்தில் புகுந்து இடுக்கண் இழைத்து அலங்கோலப் படுத்தும் பான்மையை உணர்ந்த சமத்துவ நோக்குடைய லெனின் மதத்தைத் தம் அரசியல் திட்டத்தினின்றும் அறவே ஒழித்து விட்டார். மதத்திற்கு இரண்டாவதாகச் செல்வமும், மூன்றுவதாகப் புகழும் மக்கள் தம் சமத்துவத்திற்குப் பகைமை யுடையன வெனவும் லெனின் கண்டார்; இவற்றையும் ஒழித்தா லன்றி உலக மக்கள் முன்னேற மாட்டார் எனத் துணிபு கொண்டார்.

ஆதலாற்றான் லெனின் மதமாய, ருஷ்ய மதத்தில், மதமில்லை; பணக்காரன் இல்லை; புகழ் பெறுதற்குரிய அதிகார வர்க்கம் இல்லை. மக்கள் இதனினும் ஓர் உயரிய மதத்தைக் கைக் கொள்ளற்கு இயலுமோ? சிந்திப்பீர்களாக.

•

பணக்கார வகுப்பினர் இன்மையால் எங்ஙனம் ஏழ்மை அழிந்து படுகின்றதோ, அங்ஙனமே மதம் என்ப தின்மையால் அறியாமையும் மெய்ப்பொருள் காண்டற்குத் தடையாய வேற்றுமை உணர்ச்சியும் அழிந்து படுகின்றன. புகழ் அழிபடுவதால் எளியவனும் இல்லா தொழிகின்றான். செயலையும் பயனையும் ஒன்று படுத்தி நோக்குவார்க்கு ருஷ்ய மதத்தின் மேன்மை புலப்படும். பயின்ற மதம் போய்விடுமே, திரட்டிய செல்வம் போய் விடுமே, முயற்சித்த புகழ் போய் விடுமே எனத் தருக்கிப்பார் இவற்றால் விளையக்கூடிய நலன்களையும் காண்பரேல், மதத்தின் உடலும், செல்வத்தின் உடலும், புகழின் உடலுந்தாம் அழிந்தன வென்றும், அவ்வற்றின் உயிர்கள் நிலைத்தன வென்றும் களிப்பர்.

## ருஷ்யப் புரட்சி

நிற்க, ருஷ்ய மதப் புரட்சிப் போராட்டம் முதன் முதலாகத் தலைகாட்டிய போழ்து, லெனின் சுவிட்சர் லாந்திலுள்ள சூரிச் நகரத்தில், அவ்வூர் வணிகர் ஒருவர் ஆதரவின்கீழ் வாழ்ந்து வந்தார். புரட்சி இயக்கம்

திறன் பெற்று அரசாங்கத்தாரோடும் மல்லாடத் தலைப் பட்டமையை அறிந்த லெனின், '**தூரதேசத்துக் கடிதங்கள்**' என்ற தலைப்பின் கீழ் தம் கொள்கைகளைத் தெள்ளிதாய் விளக்கி வரைந்துவந்தார். புரட்சி இயக்கத்தார் முதலாகப் பற்றவேண்டிய போராட்ட முறைகளுள் தொழிலாளர் ஆண் பெண் இரு பாலரையும் கொண்ட ஓர் இராணுவத்தை அமைத்துக் கோடலும், அதிற் பெண்கள் சுக சாதனச் சேவையைக் கைக்கோடலும், ஆண்கள் அரசாங்க நிலயங்களைக் கைப்பற்றிப் பணக்காரர்கள் வீடுகளில் ஏழைகட்கு இடமுண்டாக்கித் தருதலும், எல்லாக் குடும்பங்களும் பட்டினி யின்றி இருத்தற்கு முயற்சித்தலும் இன்றியமையாதன எனத் தெரிவித்தார்.

இதன் பின்னர் இவர் பெட்ரோக்ராட் வந்து சேர்ந்தார். அதுபோது லெனினுக்கு அரசாங்க வரவேற்பு அளிக்கப் பெற்றது. ஆயினும் வண்டியை விட்டுக் கீழிறங்கியதும் பணக்காரர் புரட்சி ஒழிந்தது என்றும், இனி ஏழைத் தொழிலாளர் முயற்சியே துவக்கப்படும் என்றும் மொழிந்து வரவேற்பை ஏற்றுக்கொள்ளாது அகன்றுபோய், தன்னந் தனியே தாம் கொண்ட கொள்கைகட்காகப் போரிடத் தலைப்பட்டார். இதன் பயனாய் ருஷ்யப் பெரும் புரட்சி மூண்டது. உள் நாட்டுச் சண்டையாற்றான் தொழிலாளர் அரசு வாய்க்கும் என்பதும்,, பணக்காரர்கள் நிலக்காரர்கள் அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்பதும், இவையன்றி உலகத்

தொழிலாளர் அரசு நிலைக்காது என்பதும் லெனின் அவர்கள் தம் மூன்று நம்பிக்கைகள். ஆயின் இதனை முற்றினும் இவருழை யிருந்த ட்ராட்ஸ்கி ஒப்புக் கொள்ளவில்லை யெனக் கூறப்படுகின்றது.

ஒரே மூச்சில் தொழிலாளர் அரசை நிறுவுதல் வேண்டும் என்று லெனின் கருதினார். தொழிலாளர் அரசை நோக்காகக் கொண்ட நிலக்காரர்கள் தொழிலாளர்கள் கொண்ட ஓர் குடியரசை நிறுவுதல் வேண்டும் என்று டிராட்ஸ்கி கருதினார்.

ருஷ்யாவில் இதுபோழ்து குடியானவர், நிலக்காரர்கள், தொழிலாளர்கள், இத்தகையினரால் நிறுவப் பெற்ற ஓர் அரசாங்கம் நிலவியது. அரசர் ஆட்சி அழிபட்டது. எனினும் அரசர் ஆட்சி முறை இன்னும் இழிபடவில்லை என லெனினுடைய நண்பர்கள் கருதி, அதுகாறும் தற்போதுள்ள ஆட்சி முறை இருத்தல் நன்று என்று கூறினர். தற்போதுள்ள ஆட்சி முறையும் தொழிலாளர் குடியானவர் ஆட்சி யாகாமையால் மீண்டும் உள்நாட்டுப் போரால் நோக்கங் கொண்ட குடியானவர் தொழிலாளர் அரசு நிலை பெறுதல் வேண்டும் என லெனின் வற்புறுத்துவாராயினர். எனவே, லெனினை அவர் தலைமையான தொண்டர்களும் நண்பர்களுமாய திரு. கேமினீவ், திரு. ரைகாவ் என்பவர்களும் கைவிடுத்தனர். இந்நிலையில் ஜர்மன் பெரும் போர் நிகழ்ந்து வந்தமையால், தொழிலாளர் புரட்சியை வற்புறுத்தாமல், அரசரின் வீழ்ச்சியின்

பயனாய் அமைந்துள்ள தற்காலிக அரசாட்சியைக் கொண்டே ருஷ்யாவைக் காப்பாற்றிக் கோடல் வேண்டுமென்றும் கூறப்பெற்று வந்தது. போல்ஷ்விக் கட்சிப் பத்திரிகை 'பிரவ்தா'வும் இதனையே வலியுறுத்தியது. தொழின் மதத்தைக் குடியரசில் சட்ட ஒழுங்கிற்கு இசைந்த வழியில் பிரசாரம் புரிந்து ருஷ்யாவில் நிறுவிக் கொள்ளலாம் என்றும், தொழின் மத அரசு பற்றித் தனிப்பட்ட ஓர் புரட்சிப் போர் அவசியமன்று எனவும் பெரும்பாலோர் தருக்கினர். சட்ட வரம்பிற் போவதும், பிரசாரத்தால் மக்களைத் தட்டி எழுப்பி எல்லா மக்களுக்கும் நல்லறிவும் சுதந்திர வேட்கையும் உதித்த பின்னர்தான் புரட்சிப் போரிடுவது என்பதும் வெறும் கதை என்றார் லெனின். நமது கொள்கைகள் போதனைகளாகா; உடனே செயன் முறையில் அநுட்டித்தற் குரியனவாம் என்றார். மேலும், இதுவே மார்க்ஸ் என்னும் அரசியற் பேராசிரியராலும் போதிக்கப் பெற்ற உண்மையாகும்.

லெனின் எவ்வாற்றானும், முதலாளித் தத்துவம் படைத்த பெரு நிலக்காரர்களின் (பண்ணைக்காரர்கள்) ஆட்சி முறைக்கு மனம் ஒப்பாதவராய், தொழிலாளர்களும், குடியானவர்களும் கொண்ட ஆட்சியே சமத்துவ ஆட்சி யென்றெண்ணி இதனிற்றானே கண்ணுங் கருத்துமாய் உழைத்துவரலானார். மன்னனின் கொடுங் கோலாட்சி நீங்கிக் குடியரசு நிலைபெற்றும்கூட, இக் குடியரசில் பெருங் குடி மக்கள் பெரும் அதிகாரங்களை

வகித்து நிற்பது கண்டு, இதில் ஏழைமக்கட்குச் சிறிதும் பயனின்று என லெனின் இக் குடியரசை ஒப்பவில்லை. கொடுங்கோன் முறையை ஒழித்த ருஷ்யர், தம் நாடு மீண்டும் பணக்காரர்களாய பெருங்குடி மக்கள் ஆட்சியில் இருப்பதையும், தொழிலாளர்களும் ஏழைக் குடியானவர்களும் இப் பணக்காரர்கட்கு வால்களே போன்று வாழ்ந்து வருமாறு நேரிடுவதையும் கண்டனர். புரட்சி இயக்கம் குடியரசைக் கொடுத்தது. மனோராச்சியத்தில் கற்பித்த ஓர் எண்ணம் குடியரசாய் உடலும் உயிரும் பெற்று உருக்கொண்டது.

ஏழை மக்கள் பணக்காரக் குடியரசுக்குத் துணையாய் நின்றார் எனினும், நாளைக்கு அவர்கள் யாது செய்வர் என்பதை லெனினும் அறியாராய் இருந்தார். பணக்கார ஆட்சி முறை நாட்டில் வேரூன்றி நிலைத்தற்குள்ளாகவே, பணக்காரர்களை எதிர்த்து ஏழைக் குடியானவர்களும் தொழிலாளர்களும் குடியரசில் உள்ள அதிகாரப் பதவிகளைக் கைப்பற்றி விடலும் கூடும் என்று லெனின் கருதினார். இதனை லெனின் எதிர்பார்த்து, இதற்கெனப் பல சாதனங்களையும் கிராமங்களில் அமைத்து வைத்திருந்தார். கிராமங்களில் உள்ள ஏழைக் குடியானவர்களும் தொழிலாளர்களும் தங்கள் தங்கள் பண்ணைக்காரர்களை எதிர்த்து, அவற்றைக் கைப்பற்றியதும், அரசாங்கம் இந் நிலக்காரர்கள் நிலங்களை அரசாங்கத்திற்குச் சேர்த்து விட வேண்டும் என்பதே லெனின் அவர்கள்தம் திட்டம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUN 1933
78326
MADRAS

எனினும் இஃது எளிதான செயலன்று. முதலாளிகளே இல்லாத, ஏழைக் குடியானவர்களையும் தொழிலாளர்களையுமே கொண்ட ஓர் ஆட்சியைப் படைப்பதற்கு ருஷ்யா இடந் தருமா? அதன் நிலைமை இதற்கு இயைந்ததாய் உளதா? என்னும் ஐயப்பாடுகள் லெனின் மனதில் உதித்தன. பெருங்குடி மக்களைச் சிறு குடிகள் பின்பற்றியே நின்றனர்; பெரிய பண்ணைக்காரர்களைக் கண்டு அஞ்சியே இருந்தனர். இச்சிறிய நிலக்காரர்கள் கோழைகளாய் இருப்பதால் ஏழைத் தொழிலாளர்கள் பெரிய நிலக்காரர்களை எதிர்ப்பதற்கு இடமில்லாமல் இருந்தது. எனவே, சிறுகுடி மக்களைப் பெருங்குடி மக்களினின்றும் தனிப்படுத்துதல் அவசியமென்று லெனின் கருதினர். சிறு குடி மக்களும் தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்து குடியரசைத் தங்கள் பக்கமே இழுத்துக் கொள்ளுமாறு பெரிதும் முயற்சிப்பர் என்பதை லெனின் எதிர்பார்த்தவராய், சிறுகுடி மக்களிடையிலும் தொழிலாளர்களிடையிலும் பிரசாரம் புரியத் தலைப்பட்டார். பொறுமையாக பிரசாரம் புரிவதில் முயற்சியோடு நிற்கும் லெனினை அவர்தம் தோழர்கள் எளனம் புரிந்தனர். பெரும்பான்மைக் குடியினரால் நிறுவப் பெற்றுள்ள குடியரசில், தொழிலாளர் குடியானவர் சார்பாய்ப் பிரசாரம் புரிதல் அடாது எனத் தோழர் காமினேவ் எள்ளினர். சிறுபான்மைக் கட்சியில் இருந் துழைத்தலால் முதலாளித் தத்துவம் அகன்று போமென லெனின் இதற்கு விடையிறுத்து

வந்தார். இதன்பேரில் அராஜகம் வகித்துச் செல்வதாகவும், சிறுபான்மை வகுப்பினர் ஆட்சியை நிறுவும் கொள்கை (Blanquism) யைக் கொண்டதாகவும் லெனின் மீது குற்றம் சுமத்தப் பெற்றது. 'அராஜகம் (Anarchism) என்பது அரசாங்க ஸ்தாபனங்களே வேண்டாம் என மறுப்பது. நான் பணக்காரர்கள் நிறைந்த குடியரசு நீங்கி ஏழை நிலக்காரர்களும் தொழிலாளர்களும் நிறைந்த குடியரசை நிலை நிறுத்த விரும்புகின்றேன். இதற்கிடைக் காலத்தில் அரசாங்கம் ஆட்சி புரிந்தே தீர வேண்டும். ஆனால் அவ்வரசாங்கம் குடிகளாலேயே அமைந்ததாய் இருத்தல் வேண்டும் என்றே கருதுகின்றேன். இஃது அராஜகமாகாது' என முதல் குற்றத்தை லெனின் மறுத்தார். ருஷ்யக் குடியரசு பெரும்பான்மை மக்களால் நிறுவப் பெற்றுள்ளதாதலால், குடியரசின் தலைமையான பதவிகளைக் கைப்பற்றுமாறு முயற்சிப்பது, இரண்டாவது குற்றமான சிறுபான்மை ஆட்சி முறைக்கு முயற்சித்தலாகாது என இரண்டாவது குற்றத்தையும் மறுத்தார்.

பின்னர் குடியரசு ஊன்றி நிலைபெறும் முன்னரே தொழிலாளர் ஆட்சிக்குப் புரட்சிசெய்தல் முறையன்று எனவும் குற்றம் கூறினர். நிலைபெற வேண்டுவது தொழிலாளர் ஆட்சியே யாதலால் இதுவும் குற்றமன்று எனவும், ஏழை--பணக்காரர் இரு திறத்தாராலும் கொண்ட ஓர் புரட்சி இயக்கத்தைக் கொண்டு குடியரசைக் நிறுவியமை ஓர் முறையாகக் கொள்ளப்பட்டதே

யன்றி துவக்கத்திற்றுனே தொழிலாளர் குடியரசுக்கும் புரட்சி செய்திருக்கலாம் எனவும் விடை பகர்ந்தார்.

இந்நிலைமையில் 1917-ஆம் ஆண்டில் ஏப்ரில் மாதத்தில் 21-ஆம் நாளில் பிட்ரோக் ராட் நகரத்துக் குடிகள் ஒரு திரளாய்க் குழுமி அரசாங்கத்திற்கு எதிராகப் புரட்சி செய்தனர். ஜெர்மன் போரின் தொடர்பாய் ருஷ்யாவைப் பற்றிய வரையில் மில்யூகோவ் என்பவரால் செய்து கொண்ட உடன்படிக்கையைத் தற்காலிகக் குடியரசு ஏற்காதமை குற்றமென்று ஆரவாரித்துத் தற்காலிகக் குடியரசு வீழ்க எனக் கூக்குரலிடலாயினர். இதன் தொடர்ச்சியாகவே, தொழிலாளர் ஆட்சியை நிறுவிவிட வேண்டும் என்றும் சிலர் கூறினர். எனினும் சிலர் கூடி ஆட்சி முறையைக் கைப்பற்ற முயல்வது, அரசியல் நெறிக்கு முரண்பாடாகும் என லெனின் எடுத்துரைத்து, இச் சிறுபான்மையினர் பெரும்பான்மையினராகும் வரையில் தற்காலிக அரசாங்கத்தோடு சமாதானமாகப் போதலை வற்புறுத்தினர்.

## இரண்டாம் கலகம்

ஜூன் 10-இல் மீண்டும் ஒரு கலகம் விளைந்தது. ருஷ்யக் காங்கிரசில் படைக் கோலத்தோடு புகுந்து, தமது கொள்கைகளை வற்புறுத்துமாறு துணிந்து இக் கலகம் லெனினுல் தூண்டப்பெற்றது. எனினும் இருதிறத்தாரும் மோதுண்டதும் கலகம் மீறுவதற்குள்,

தம் கூட்டத்தின் சிறுமையினை உணர்ந்த லெனின் பின் வாங்கிக் கொண்டார்.

தற்காலிகக் குடியரசு தன் நிருவாகக் குறைபாடுகளால் பொது வுடைமைக் கூட்டத்தார் (Bolsheviks) வலையிற் சிக்குண்டது. மக்கள் சமாதானத்தை விரும்ப, அரசு போரை விரும்பிற்று. குடியரசுக்கும் குடிமக்கட்கும் உள்ள நுட்பமான இவ்வேற்றுமை உணர்ச்சியை லெனின் ஒருவரே இனி துணர்ந்தார்.

## மூன்றும் கலகம்

மூன்றும் முறையாக மீண்டும் ஜூலையில் ஒரு புரட்சி நிகழ்ந்தது. 'முதலாளித் தத்துவ மந்திரிகள் ஒழிக' 'தொழிலாளர்கட்கே எல்லா உரிமைகளும் உண்டாகுக' எனக் கூக்குர லிட்டனர். இதில் போல்ஷ விக் கூட்டத்துத் தலைவர்கள் கலந்து கொண்டனர். ஆயினும் தற்காலிக குடியரசுப் படையினர் கலகத்தை அடக்கிவிட்டனர். லெனின் இதன் பயனுய் பின்லாண்டு தேசம் நோக்கி ஒடி விட்டார். எனினும் லெனின், அரசாங்கத்தின் வலிமை எவ்வளவில் உள்ளது என்பதைப் பரிசோதிப்பதற்காகவே இக்கலகத்தைப் பயன் படுத்திக் கொண்டார். இதற்கு முன்னர் நிகழ்ந்த கலகங்களும் சோதனைக் கலகங்களே. தன் வலியும் மாற்றுன் வலியும் சீர் தூக்கிப் போர் புரிதலே முறை யென்பது லெனின் தம் கொள்கை. இதற்கேற்பவே இடையிடையே கலகங்களை நிகழ்த்தி, அரசாங்கத்தின்

வலிமை யினையும் பொதுவுடைமைக் கூட்டத்தினர் ஒற்றுமையினையும் நிறை தூக்கிப் பார்த்து வந்தார்.

இந்நிலையில், ஜெனரல் கார்னிலாவ் என்பவர் ருஷ்யாவைக் கைப்பற்றி, ருஷ்யாவில் ஏதேச்சாதிகாரம் செலுத்த முயன்றார். இவரையும் இவர்தம் படைகளையும் அதுகால் ருஷ்யாவில் உள்ள பொதுவுடைமைக் கட்சியார் உட்பட எல்லாக் கட்சியினரும் எதிர்த்தனர். லெனின் குடியரசைப் பொதுவுடைமைக் குடியரசாக்குதற்குப் போராடுதலுக்கும், ருஷ்யாவை ஒரு மனிதனின் ஏதேச்சாதிகாரத்தில் விடுதற்கும் (Autocracy) வேற்றுமை உளது என்றார். ஜெனரல் கார்னிலாவின் முயற்சியின் பயனாக தற்காலிகக் குடியரசு உத்தியோகத்தர்கட்கும் லெனின் கூட்டத்தினர்க்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கையில் ஏழைக் குடியானவர்களும் ஏழைத் தொழிலாளர்களும் உடனே அரசாங்கத்தைக் கைப்பற்றப் புரட்சி செய்யக் கூடாதென்றும், ஆனால் பிரசாரம் செய்து தேர்தல் வாயிலாய்ச் சட்ட சபைகளிலும் அரசாங்கப் பதவிகளிலும் அமரலாம் என்றும் நிபந்தனை செய்யப் பெற்றது.

## சாத்வீகப் போராட்டம்

அடிக்கடி உள் நாட்டுக் கலகங்களை விளைத்துக் குடியரசுக்குப் பேரிடைஞ்சல்களை விளைத்து தொழிலாளர் ஆட்சியை நிறுவ முயற்சிப்பதிலும் உள் நாட்டுக் கலகங்க ளின்றியே சமாதானமாகச் சட்ட

சபைகள் வாயிலாக அரசுரிமையைக் கைப்பற்றுதலே சால்புடையது என இவ்வுடன்படிக்கையைப் பற்றி லெனின் பாராட்டினர்; சாத்வீக முறையில் உலகம் வியக்குமாறு ருஷ்யப் புரட்சி இயக்கம் கடிதில் அரசுரிமை பெற்றுத் திகழும் என்றார் லெனின்.

அன்று முதல் பொதுவுடைமைக்குழுவினர் பரந்த பிரசாரம் புரியலாயினர். தங்கள் தங்கள் தலைவர்களை உடனே மாற்றிவிட்டுத் தக்க தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி ஆங்காங்கு பெருங் கிளர்ச்சி செய்யப்பெற்றது. ஒரே வாரத்தில் பெட்ராக்ராட் நகர பரிபாலனத்தைப் பொதுவுடைமைக் கட்சியினர் கைப்பற்றி விட்டனர். இதற்கு டிராட்ஸ்கியைத் தலைவராய்த் தேர்ந்தெடுத்தனர். மாஸ்கோ பரிபாலனமும் போல்ஷ்விக் கட்சிக் குட்பட்டது. எனவே பொது சனங்கள் பெரும் பாலாரும் பொதுவுடைமைக் கொள்கையினராகவே இருக்கக் கண்டார் லெனின். என் அங்ஙனமாயின் இவர்கள் அரசுரிமையை நாடவில்லை? இவர்கள் கோழைகளா? என்றனர் பிற கூட்டத்தார். இதற்கு லெனின் ஒரு துண்டுப் பிரசுரத்தை 1917, அக்டோபர், 1-இல் வெளியிட்டார். 1905-இல் 130,000 நிலக்காரர்களால் ஆளப்பெற்ற ருஷ்யா, போல்ஷ்விக் கட்சியைச் சார்ந்த 1,240,000 பேர்களால் ஆள இயலாது போமோ? என லெனின் இத்துண்டுப் பிரசுரத்தின் வாயிலாகத் தம் எதிரிகட்கு விடை யிறுத்தார்.

அரசுரிமையைக் கைப்பற்றியதும் மேற்கொண்டு

எங்ஙனம் அரசு நடாத்துதல் என்றதற்கு 'அரசியல் பதவிகளைக் கைப்பற்றியதும், முதலாளிகளையும் பண்ணைக்காரர்களையும் ஒடுக்கத் தலைப்படுவோம். முதலாளிகள் செல்வத்தையும், நிலக்காரர்கள் நிலங்களையும் பறிமுதல் செய்தல் நன்றுதான். இதனினும் நன்று இம்முதலாளிகள் தம் தொழிற்சாலைகளையும், நிலக்காரர்கள் தம் நிலங்களையும் அரசாங்கம் அடக்கி யாள்வது. முதலாளிகளும் நிலக்காரர்களும் தொழிலாளர் அரசாங்கத்தின் வலிமையை உணர்ந்துகொள்வார்களாயின், அவர்கள் அரசாங்கத்திற்கு விரோதமாய்ச் செல்லற்கு அஞ்சுவார்கள். எல்லோரையும் வேலை செய்யுமாறு கட்டாயப் படுத்தப் பெறும். வேலை செய்யாதவனுக்குச் சோறில்லை' என லெனின் தெரிவித்தார். பணக்கடைகள் (Banks) முதல் எல்லா ஸ்தாபனங்களையும் தொழிலாளர்கள் கைப்பற்றி நடத்த வேண்டும் என்றும், இது காறும் நடுத்தரக் குடும்பத்தினர்களே பெரிய உத்தியோகங்களை வகிக்க முடியும் என்னும் கொள்கையைக் குலைக்க வேண்டும் என்றும், தொழிலாளர்களால் இயலாதது ஒன்றும் இல்லை யென்றும், எனவே அரசுரிமையைக் கைப்பற்றி அரசு நடாத்துதல் என்பது தொழிலாளர்கட்கு எளிதினும் எளிது என்றும் லெனின் அழுத்தமாகப் பேசி வந்தார்.

158,177 N70 N35

முதலாளித் தத்துவக் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றி அதனைத் தொழிலாளர்களையும் ஏழைக் குடியானவர்களையும் கொண்ட ஓர் அரசியல்

அமைப்பில் நிறுவ வேண்டும் என்னும் நோக்கத்தைக் கண்ணுய்க் கொண்ட லெனின் மனதில் இவ்வார்வம் நாளுக்கு நாள் முதிர்ந்து விட்டது. சந்து பூசுவது என்னும் சமாதான உடன்படிக்கைகளாலும், தம் எதிர் கட்சியினரைத் தம் வழிக்குக் கொண்டுவருமாறு முயற்சித்தலானும் காலம் வீணுகின்றதென்றே லெனின் கருதலானுர். தற்காலிக அரசாங்கத்தோடு சமாதான மான முறையில் இருந்துகொண்டு பிரசாரம் புரிந்து வருவது என்னும் ஓர் உடன்படிக்கைக்கு லெனின் உட்பட்டார் எனினும், திடுமென இத் தற்காலிக அரசாங்கம் பொதுவுடைமைக் கட்சி ஸ்தாபனங்களை எங்கு ஒரு நாளில் கைப்பற்றிப் பொதுவுடமைக்கே அழிவு தேடி விடுமோ என்று அஞ்சலானுர். எனவே, இத்தற்காலிக அரசாங்கத்தில் உள்ள முக்கியமான ஸ்தாபனங்களை எல்லாம் கைப்பற்றவும், மாற்றரசாங்கத்தை (Parallel Government) அமைத்துக் கொள்ளவும் லெனின் முயற்சிக்கலானுர்; மீண்டும் புரட்சியைக் கைக்கொண்டு அரசாங்கத்தோடு போராடத் துணிபு கொண்டார்.

## புரட்சியும் ஒரு கலையே

புரட்சிப் போராட்டம் என்பதே ஒரு கலையாகும் என்று லெனின் கூறுவார். மனிதனுடைய அறிவின் நுட்பத்தாலும் அநுபோக சக்தியாலும் வெற்றிபெறக் கூடிய புரட்சிப் போராட்டத்தை உலகினர் இழிவாக வும், முறட்டுத் தன்மை பொருந்தியதாகவும் கருதி வருகின்றனர். சட்ட இயைபு கொண்ட கிளர்ச்சியினுல்

(Constitutional Agitation) தாம் கொண்ட லட்சியங்களை அடைதலே சிறந்த வழி என்றும், புரட்சிக்காரர்கள் முறை கேடானது என்றும் எல்லாத் தேசங்களிலும் சிலரால் கருதப்படுகின்றது. நோய் பீடித்த உடலை வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்துவது இயல்பு; அவ்வுடலை இயற்கையாகவே நலன் பெறும் வழியில் வாளா விடுத்தல் மனித இயல்பு அன்று. லட்சத்தில் ஒருவர்தாம் இயற்கைச் சிகிச்சைக்கு விட்டு விடுவார்கள். லட்சத்தில் ஒருவர் செய்யும் எத்தொழிலும், கொண்ட எக் கொள்கையும் எக் காலத்திலும் பொதுவாகா. எனவே, அரசாங்கத்தை எதிர்க்க அஞ்சிய கோழைகள், புரட்சி முறையால் தன்னலன் பாதிக்கப்படும் என்று பயந்த வீணர்கள்தாம் சட்ட இயைபு (Constitutional Agitation) பொருந்திய கிளர்ச்சியைப் பற்றிப் பறை யறைவர். இந்தியாவை எடுத்துக்கொண்டு விசாரிக்கும் போழ்து, சட்டத்திற்கியைந்த கிளர்ச்சி என்பது பொருந்தாக் கூற்றாகின்றது. எத்தகைய கிளர்ச்சியும் சட்டத்திற்கு இயைந்ததாகாது. ஒன்று உள்ள சட்டங்கட்கு இணங்கியே செல்லல் வேண்டும். மற்றொன்று உள்ள சட்டங்களை எதிர்த்துப் போராடித் தமக் கேற்புடைய சட்டங்களை நிறுவிக் கொள்ளல் வேண்டும். இவ்விரண்டிற்கும் இடையில் நடுப்பாட்டை என்பதில்லை. உதாரணமாக ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும், லிபரல் (தாராள) கட்சிக்காரர்களும் சட்டத்திற் கியைந்து கிளர்ச்சி செய்யும் கொள்கையைக் கொண்டவர்கள்; இதனைச் செயன்

முறையில் அநுட்டித்தல் கூடும் என வாதாடுபவர்கள். இவ்வாதத்தை நிரூபிக்கச் சட்ட சபைகளில் புகுந்து அமைச்சர் பதவிகளை ஏற்பவர்கள். இவ்வாறு தலைமை அமைச்சர் பதவியை ஏற்ற ஜஸ்டிஸ் கட்சித் தலைவர், சட்ட சபையில் போலீஸ் அநீதிகளைக் கண்டித்துக் கொண்டு வந்த ஒரு தீர்மானத்திற்கு விரோதமாய்த் தம் வோட்டை அளித்தார். எனினும் தம் மனம் இத்தீர்மானத்தை ஏற்றது என்றும், தான் அமைச்சர் பதவியை வகித்ததால் பொது மக்கள் கொண்டுவந்த தீர்மானத்திற்கு விரோதமாய் அரசாங்கத்தோடு உறவு கொண்டு வோட் அளிக்க நேர்ந்ததென்றும் ஒரு சொற் பெருக்கில் தெரிவித்தார். தம் மனம் துணியாத செயலைச் செய்யும் ஒரு நிலைமையைச் சட்ட இணக்கக் கிளர்ச்சி அளிக்குமாயின், இதனை நாம் அடியோடும் கைவிட வேண்டியவர்க ளாகின்றோ மன்றி, தந்திர மாகப் போவதாக நினைத்துக் கொள்ளுதலால் ஏமாற்ற மடைந்தவர்களாகின்றோம். சட்ட இணக்கக் கிளர்ச்சி என்பதை நம்புபவர்கள் மண் குதிரைகளை நம்புபவர் களை ஒப்பர். கிளர்ச்சி அவசியம் என்னும் ஒரு நிலைமை அரசியல் உலகத்தில் பிறந்து விட்டதாயின், உடனே அக்கிளர்ச்சி புரட்சியாக இருக்கத்தான் வேண்டும். இப்புரட்சியை அமைதியோடும் கைக் கொள்ளலாம். புரட்சி என்பது ருஷ்யாவில் பலாத்கார முறையில் கையாளப் பெற்றதெனின், இந்தியாவில் அமைதி முறையில் கையாளப் பெறுகின்றது. ருஷ்யாவில் அப்

புரட்சிக் காலத்தில் இருந்த ஒற்றுமை, இன்றும் நம் இந்திய மக்கள் பால் இருக்குமாயின் ருஷ்யாவைப் பார்க்கினும் இந்திய மக்கள் கடிதில் தம் லட்சியங் களைப் பெறலாம். அந்தோ ! பொருமையாலும், பண வேட்கையாலும், பதவி யாசையாலும், தான்றோன்றித் தலைவர்கள் மலிந்து விட்டனர். பழம் கதைகளைக் கூறிப் புதிதாய் ஒரு மார்க்கத்தைச் செப்ப வந்தவர்கள் போல் நடித்துத் தலைவர்களாகின்றனர். ஒரு நாடு மேம்பட வேண்டுமாயின் அந்நாட்டில் ஒரு தலைவர்தாம் மக்களைப் போராட்ட முறையில் செலுத்தற் கியலும். பெரும்பான்மை மக்களால் தலைவர் என்று கருதப் பெற்ற ஒருவரையே சிறுபான்மை மக்களும் தலைவராக ஏற்று, நல்லனவும் தீயனவும் அத் தலைவர்தம் பொறுப்பே எனத் தங்கள் சுயேச்சையை அத்தலைவர் பால் ஒப்படைத்து விட்டு, சேனுதிபதியைப் பின் பற்றும் வீரர்கள் போன்று பின்னணியில் நின்று போராடல் வேண்டும். சேனுதிபதியின் நோக்கத்திலும் போர் முறையிலும், திருப்தி படைக்காத படைவீரர்கள் எக் காலத்திலும் உளர். எனினும் சேனுதிபதியெனத் தேர்ந்து எடுத்த பின்னர், போர் முடிவு பெறும் வரையில் அச் சேனுதிபதியின் கட்டளைகளைச் சிரமேற் றாங்கித்தான் செல்லல் வேண்டும். போர் முடிவு பெற்றதும், அவரவர்கள் குடும்ப விவகாரங்கள் அவரவர்களைப் பொறுத்தனவாய் இருக்கும். சேனுதிபதி இவ் விவ காரங்களிலும் மாற்றம் உரைக்க முன் வருவாராயின், அதனைப் படை வீரர்கள் எதிர்ப்பதற்கு உரிமை உடை

யவர்களாகின்றனர். இந்தியாவில் பெரும் பான்மை மக்களால் தலைவர் என்று ஏற்றுக்கொள்ளப்பெற்ற காந்தியடிகளைத் தலைவராக ஏற்க மறுக்கும் சில சிறிய தலைவர்கள், ஏன் காந்தியடிகளைப் போன்று தாமும் செல்வாக்கைப் பெற்று ஒப்பற்று விளங்கலாகாது? உலக அறிஞர்கள் மனத்தில் குடிகொள்ள லாகாது? எந்த அரசாங்கம் இதற்குத் தடைக் கட்டளை பிறப் பித்து விட்டது? நம் மக்கள் ஊன்றிச் சிந்தித்தல் வேண்டும். போராட்ட காலத்தில் ஒருவரைத் தலைவ ராய்க் கொள்வதனால், நாம் அவருக்கு அடிமைப்பட்ட வர்களாக வில்லை. போர் இறுதியில் அவரவர்கள் தம் வீட்டின் தலைவர்களே யாவர். இதனைத் தடுக்க வல்லார் இலர்.

## மகா நாடு

இது நிற்க; 1917 அக்டோபரில் 25 ந் தேதியன்று ருஷ்யாவில் ஒரு மகாநாடு நடைபெற்றது. ருஷ்யாவைப் பொதுவுடைமைக் கட்சியினர் ஆதிக்கத்தில் விட்டு விடு வதா என்று முடிவு செய்வதற்காகவே அஃது திரட் டப் பெற்றது. சில பொதுவுடைமைக் கட்சியினர் தற் காலிகக் குடியரசையே நாளுக்கு நாள் தொழிலாளரா சாய் மாற்றிக் கொள்ளலாம் என்று ஆலோசனை கூறி னர். லெனின் முன் பின் பார்ப்பது பெருங் குற்றம், இஃது புரட்சி முறைக்குத் துரோகம் செய்வதாகும், சட்டத்திற்கு இணங்கிப் புரட்சியை நிலை நிறுத்தல் என்பது வீண் கனவு, இத்தகைய மனப்பான்மையை

அடியோடு ஒழிக்க வேண்டும் என்று கூறினர். அக்காலத்தில் பெட்ரோக்ராட், மாஸ்கோ முதலிய தலையான நகரங்களில் இருந்த குடி சனங்களிற் பெரும் பான்மையினர் பொதுவுடைமைக் கொள்கையினராய், புரட்சி வேட்கை முதிர்ந்தவர்களாய்த் தற்காலிக அரசாங்கத்தைத் தவிர்க்கப் பரபரப்போடும் இருந்தனர். அது சமயம் நிகழ்ந்த கூட்டம் ஒன்றில், காலம் முதிர்ந்து விட்டது என்றும் தருணத்தைக் கை விடாமல் புரட்சி புரிந்து அரசாங்கத்தைக் கைப்பற்ற வேண்டும் என்றும் லெனின் கூறினர். அக்கூட்டத்தில் இன்றைக்கு ருஷ்யப் பொதுவுடைமைத் தலைவராய் இருக்கும் ஸ்டாலினும், டிராட்ஸ்கி முதலானவர்களும் கலந்து கொண்டனர். உடனே புரட்சிப் போராட்டந் தொடுக்க வேண்டும் என்று லெனின் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இருவரே அதனை எதிர்த்தனர். எனவே பெரும் பான்மையினரால் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது. தீர்மானத்தை எதிர்த்த இருவரும் உடனே லெனினைக் கைவிடுத்துத் தம் கருத்துக்களை ஒரு சுற்றுக்கடித வாயிலாக எல்லாப் பொதுவுடைமை ஸ்தாபனங்கட்கும் தெரிவித்தனர். எனினும் இஃது பயன் பெற வில்லை. தேச விடுதலையை அடையுமாறு முயற்சிக்குந் தோறும், சில தலைவர்கள் பிரிந்து தனிக் கட்சிகளை நிறுவித் தாமும் தலைவர்களாகத் திகழ முயற்சித்தல் எல்லாத் தேசங்கட்கும் பொதுவாக இருப்பதாய்த் தோன்றுகின்றது!

## இருவர் பிரிவும், பிரசாரமும்

இந்நிலையில் ருஷ்யக் காலாட்படையைப் போர் முகத்திற்குச் செல்லுமாறு தற்காலிகக் குடியரசுத் தலைவராய் இருந்த கிரன்ஸ்கி கட்டளை யிட்டார். போர் போர் என்று போரிட்டுக் களைத்துப்போன காலாட் படையினர் இதனை மறுத்தனர். உடனே இப்படை வீரர்களை பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள் சார்பு கொண்டு பேசிப் படை வீரர்களின் செல்வாக்கைப் பெற்று விட்டனர். இதில் டிராட்ஸ்கியே தலை நின்றார். இதன் பயனாய் அரசாங்கத்திற்கு இராணுவத் தலைவர் கள் தம் துணை யில்லை யென்று நிரூபிக்கப் பெற்று விட்டது. இராணுவப் படையினரே இனிப் பொது வுடைமைக் கட்சியினர்தம் ஆட்சியை நிறுவ முயற்சிப் பர் என்றும் நம்பத் தலைப்பட்டனர். எனினும் அரசாங்க வலிமை குன்றிப் போய் விடவில்லை என்றும், பொது வுடைமைக் கட்சியினர் தம் புரட்சி முறியடிக்கப்படும் என்றும், இரகசியக் கூட்டத்தில் மாற்று வோட் அளித்த காமினவ் சினோவிவ் என்னும் இரு தலைவர்களும் கூறி வந்தனர். (மகாத்மா உப்புப் போர் தொடுத்தவுடன், தென்னாட்டில் உள்ள ஒரு 'தலைவர்' 'காந்தியின் முயற்சி பலிக்கவில்லை, காந்தியைப் பின் பற்றுவாரில்லை' என்று தன் பத்திரிகையில் தலைப்புகளை வரைந்து மக்களின் ஆர்வத்தைக் குறைக்க முற்பட்டமையை ஒப்பு நோக்கு வாராக.) இவ்விரு தலைவர்கள் தங்கள் சீற்றறிக்கை யோடு நின்று விடாமல், ருஷ்யா உள்ள நிலைமையில்

தொழிலாளர் புரட்சிப் போரைக் கைக்கொள்ள விழைதல் தற்கொலை என்றும், இயலாத செயல் என்றும் பிரசாரம் புரியலாயினர். (திரு. லான்ஸ்லாட் லாட்டன் என்பவரால் வரையப்பெற்ற ருஷ்யப் புரட்சி இயக்கம் என்னும் நூலிற் காண்க.) உடனே லெனின் இச் சந்தேகிகளைத் தாக்கத் துவங்கினர். இவர்களை நம்பிக்கையற்று அரற்றுபவர்கள்' என்று தாக்கியும், விடுதலைத் துரோகிகள் என்று குற்றம் சாட்டியும், வேற்றரசுக்கு நாட்டைக் காண்பித்துக் கொடுப்பவர்கள் என்று நிந்தித்தும் பேசினர்.

'கஷ்டமான காலம்! கஷ்டமான காலத்தில் கஷ்டமான விஷயங்கள்! இக் கஷ்டமான விஷயங்களை முடிவு செய்யும் முன்னர் கஷ்டமான துரோக சிந்தனைகள்' என்ருர் லெனின்.

அக்டோபர் 25க்குள்ளாகவே புரட்சிப் போர் நடை பெற வேண்டுமென்று லெனின் வற்புறுத்தலானர். தற்காலிகக் குடியரசு இதற்குள் எங்கு இராணுவ பலத்தைக்கொண்டு பொதுவுடைமை ஸ்தாபனங்களை அழித்து விடுகின்றதோ என்று அஞ்சினர். புரட்சிப் போராட்டத்தை முன்னறிக்கையின்றி திடுமெனத் துவக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். செயல், செயல்; முதன் முதலில் அரசியல் ஆதிக்கம்; ஏனைய விஷயங்கள் எல்லாம் அதற்குப் பின்னர் என்று லெனின் அடிக்கடி கூறி வருவார்.

## புரட்சிப் போர்

எனவே, அக்டோபர் 15-இல் புரட்சிப் போர் துவக்குமாறு முடிவு செய்யப் பெற்றது. எங்கே பார்க்கினும் கிளர்ச்சிக் கூட்டங்கள்; பொது மக்கள் பொதுவுடைமைத் தாகம் முதிர்ந்தவர்களாய் 'தற்காலிகக் குடியரசு வீழ்க,' பொதுவுடைமை நிலைபெறுக என ஆரவாரம் செய்தனர். புரட்சி இயக்கம் எதிர்பாராத வகையில் வலிமை பெற்றது. இதனைக் கண்ட தற்காலிகக் குடியரசு ஆட்சியினர் சமாதான உடன்படிக்கைக்கு முற்பட்டனர். லெனின் இதனை ஏற்றுக் கொண்டார். இதன்படி அரசாங்க ஸ்தாபனங்களில் பொதுவுடைமைக் கட்சியினர்க்குப் பொறுப்பான பதவிகள் அளிக்கப் பெற்றன. அரசாங்க ஸ்தாபனங்களிலும் பொதுவுடமைக் கட்சியினரே பெரும்பான்மையினராய் இருத்தலால், இவற்றை முற்றினும் கைப்பற்றி விடுதல் நாட்கணக்கில் உள்ளது என்று கருதியவராய், லெனின் ஒப்பந்தம் செய்து கொண்டமை அவரது அறிவு நுட்பத்திற்குச் சான்றாகவே இருக்கின்றது. பகைவனோடு போரிடும் போழ்து சமாதானக் காலத்தைப் பயன் படுத்திக் கொள்ளல் என்பது ஒரு சிறந்த போராட்டத் தந்திரமாம். இத் தந்திரம் எல்லாத் தளகர்த்தர்கட்கும் தோன்றுவ தின்று. உண்மைத் தலைவர்கள்பால் இஃது உள்ளதென நெப்போலியனினும், மகாத்மா காந்தியினும் இனிது புலனாகும்.

இப்புரட்சிப் போராட்டத்தில் லெனினுக்கும்

டிராட்ஸிக்கும் உள்ள மாறுபாடு இஃது. டிராட்ஸ்கி எல்லாச் சனங்களுமே புரட்சிப் போரை ஒப்புக் கொண்ட பின்னர்தான் போரிட வேண்டும் என்ருர். எல்லா மக்களையும் ஒரு வழிக்குக் கொண்டு வருதற்கு எக்காலத்திலும் எத்தேயத்திலும் இயலாது ஆதலால் அறிவுடையவர்களைக் கொண்டு போரிட்டு வெற்றி பெற்று உயரிய ஆட்சி முறையைக் கையாடினல் பொதுமக்கள் அனைவரும் அவ்வாட்சி முறையில் விளையும் நற்பயன்களைக் கருதி ஆட்சி முறையை ஒப்புக் கொள்ளுவர் என்ருர் லெனின். லெனின் கொண்ட கருத்து அறிவுடைமை உளதாகவும், பயன் தருவதாகவும் காணப்படுகின்றது; லெனின் கொள்கை தான் வெற்றி பெற்றது என்பதற்கு இன்றைய பொது வுடைமை ருஷ்யாவே நற்சான்று.

லெனின் புரட்சிப் போரை எளிதில் கைக்கொள்ள லாம் என்றும், வெற்றி எளிதில் கிடைக்கும் என்றும் கூறுவார். லெனின் இத்தகைய சோதிடம் கூறுவதில் வல்லவர் என்று லெனினை டிராட்ஸ்கி ஏளனம் புரிந்து வந்தார். ஆனல் ஏளனம் புரிந்து வந்த டிரார்ட்ஸ்கி இன்று தேசப்பிரட்டராய் ஸ்பானிய நாடு சென்று சொந்த நாட்டைத் தாக்கி எழுதி உயிர் வாழ்கின்ருர். லெனின் புரட்சி இயக்கத்தில் வெற்றி பெற்று, பொது வுடைமை ருஷ்யாவை உலகம் வியப்பெய்த நிறுவினர். லெனின் உருவப் படமில்லாத வீடு ருஷ்யாவில் ஒன்று மில்லை. ருஷ்யர்கட்குக் கடவுள் மீது நம்பிக்கை யில்லை;

விடுதலைப் போராடி வெற்றிக் கொடி நாட்டி இறந்து போன லெனின் மீது நம்பிக்கை உண்டு.

எதற்கும் நம்பிக்கை வேண்டும். லெனின் 23—4—1870-இல் பிறந்தார்; 21—1—1924-இல் இறந்தார்.

சென்னை-600 008.
17832

'மீனாட்சி' பிரஸ், 31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# இன்பசாரம்

இம் மாத்திரையை மாலையில் படுக்கைக்குப் போகும் போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி எற்படும்; இரத்த விருத்தி யுண்டாகும். இம்மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது. இதன் முக்கிய குணம் புருஷர்களுக்குப் புருஷத் தன்மையும் பெண்களுக்குப் பெண் தன்மையும் உண்டு பண்ணுவதாகும்.

இருபாலரின் இச்சையைப் பூர்த்தி செய்து கொள்ளச் செய்வதும் தவிர கர்ப்பம் தரிக்கவும் செய்யும்.

இன்பசாரம் என்னும் மாத்திரையைச் சாப்பிட்டால் ஒடிந்த எலும்புகள் கூடிவிடுகின்றன.

இன்பசாரத்தைச் சாப்பிட்டால் சொர்ப்பன ஸ்கலிதம் நீங்கி விடுகின்றது.

இன்பசாரத்தால் தாது விருத்தியைப் பெற்றுவிடலாம்.

இன்பசாரத்தால் நீரில் கலந்துபோகும் இந்திரியத்தைத் தடுத்துக் கொள்ளலாம். (செடிமெண்ட்ஸ்)

இன்பசாரத்தால் சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றிக் கொள்ளலாம்.

இன்பசாரத்தால் க்ஷய சுரத்தையும், மற்ற சுரங்களையும் போக்கி விடலாம்.

இன்பசாரத்தால் சோகை நோய் நீங்கி, இரத்த விருத்தி யடையலாம்.

இன்பசாரத்தால் இருதய வியாதி, சுரம், பித்தசோகை, பசியின்மை, வீக்கம், மதுமேகம், பாரிசவாய்வு க்ஷய இருமல் சுரம் இவை நீங்குகின்றன. நூற்றுக்கணக்கான நன்மதிப்புக்கள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு விலை ரூபா 5.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# எது வேண்டும்?

இலகுவான இனிய செந்தமிழ் நடையில் படிக்கப் படிக்க இன்ப மூட்டும், நினைக்க நினைக்க ஆவேசம் உண்டாக்கும் அரிய கட்டுரைகள் வேண்டுமா?

நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், உரிமை வேட்கையும் உண்டாக்கும் உயர் வியாசங்கள் வேண்டுமா?

நெஞ்சை அள்ளும் இன்பக் கதைகளும், விடா நகைப்பை விளைவிக்கும் விகடத் துணுக்குகளும், உள்ளத்தை உருக்கும் வாழ்க்கை வரலாறுகளும் வேண்டுமா?

சித்திரப் படங்கள் நிறைந்த 108 பக்கங்கள் கொண்ட நல்ல காகிதத்தில் அச்சிட்டுக் குறைந்த விலையில் விற்கப்படும் பத்திரிகை வேண்டுமா?

## வேண்டுமானல்

# 'தமிழரசு'

## மாதப் பத்திரிகையை உடனே படியுங்கள்.

'தமிழரசு' ஒன்றுதான் தமிழரது புது வாழ்வில் தணியாத தாகமுடையது; 'மக்கள் தொண்டே கடவுள் தொண்டு' என்ற உயரிய கருத்துடையது; அக் கருத்தோடு சலியாது உழைப்பது.

வருட சந்தா: உள் நாடு ரூபா 1. வெளி நாடு ரூபா 2.
தனிப் பிரதி அணா 1. மாதிரி சஞ்சிகை இனம்.

காரியஸ்தர்,
'தமிழரசு' காரியாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

SCANNED